19th May 1954]

" (*c*) Article 187 (3) of the Constitution contemplates the issue of a separate consolidated set of rules for the entire secretarial staff of the Legislature, both gazetted and non-gazetted.

" (*d*) It is expected to issue the rules at an early date."

Difference in the scales of pay of officers of the Legislature Secretariat and corresponding officers in the Secretariat

* 946 *Q*.—SRI K. ARANGANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) why the scales of pay of the Assistant Secretary and Deputy Secretary in the Madras Legislature Secretariat are different from those of corresponding officers in the Secretariat departments;

(*b*) whether there is any proposal to bring these scales of pay to the level of those obtaining for similar posts in the Secretariat departments; and

(*c*) if not, why?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) The scales of pay of the Assistant Secretary and the Deputy Secretary to the State Legislature are different from those of corresponding officers in the Secretariat Departments, because the nature of the duties of these posts varies from each other.

" (*b*) No, Sir.

" (*c*) For the reasons given in clause (*a*) above."

SRI S. RAMALINGAM :—" சட்டசபைக் காரியாலய காரியதரிசிகள் சில சமயம் காலை எட்டு மணிக்கும், சில சமயம் இரவு பத்து மணிக்கும் வேலைக்கு வரவேண்டியிருக்கிறது. இப்படி வேலை நேரங்கள் அடிக்கடி மாறுவதனால், அவர்களுக்கு அதிகமான வேலையும், தொந்தரவும் ஏற்படுகிறது. ஆகையால், அதை உத்தேசித்து அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்கப்படாவிட்டாலும்கூட, இதர இலாகாக்களில் வேலை செய்யும் உதவிக் காரியதரிசிகள், டிபுடி காரியதரிசிகள் இவர்களுக்கு கொடுக்கப்படும் அளவுக்காவது இவர்களுடைய சம்பளத்தையும் நிர்ணயிக்க சர்க்கார் யோசிப்பார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" It is true the officers are a little bit inconvenienced when hon. Members of the Legislature are meeting here in session. But we meet only for three or four months in a year. The rest is off period." 8–30 a.m.

SRI S. RAMALINGAM:—" சட்டசபை கூடும் காலத்தில் அவர்களுக்கு பிரத்தியேக ' அலவன்ஸ் ' கொடுக்க மந்திரி அவர்கள் யோசிப்பார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The hon. Member will agree to the cut later on when the legislature is not in session."

SRI V. BALAKRISHNAN :—" Are the qualifications for the appointment the same as in other departments? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Qualifications will vary according to the officers concerned, for example, for the Assistant Secretary and the Deputy Secretary. A separate set of rules for the Legislature Secretariat is being framed."

MR. SPEAKER :—" As it affects my department I want to interfere with the permission of the House. Does the Hon. Minister mean that officers of the Legislature Secretariat are keeping quiet during the recess? "

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்கள் கேட்ட கேள்வியைத்தான் நான் கேட்பதாக இருந்தேன்."

MR. SPEAKER :—" தாராளமாகக் கேளுங்கள்."

SRI K. VINAYAKAM :—" I rise on a point of order. Can a member take the clue from the Chair and take part . . ."

MR. SPEAKER :—" Usually the Speaker will not take part in any of the questions. This particular question affects a department of which I am the head. In view of that, even though it is not the practice for the Chair to take part in questions, I put the question."

SRI K. V. RAMASWAMI :—" கேள்வி நேரத்திலாவது சபாநாயகர் கேள்விகள் கேட்கலாம் என்ற முறையில் சட்டசபை விதிகளைத் திருத்த முன்வருவீர்களா ? "

MR. SPEAKER :—" சபாநாயகர் கேள்விகள் கேட்கக்கூடாது. இந்தக் கேள்வியானது என்னுடைய இலாக்கா சம்பந்தப்பட்டதினால் நான் கேட்கிறேன் என்று சொன்னேன்."

SRI M. KALYANASUNDRAM :—" துரதிருஷ்டவசமாக சர்க்கார் கட்சித்தலைவர், அவருடைய காரியாலயத்தில் இருக்கக்கூடிய அதிகாரி களுக்கும், சட்டசபை காரியாலயத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கும் ஒரு கலகத்தை மூட்டப்பார்க்கிறார்கள் ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" அதற்கு நீங்கள் தூபம் போடுகிறீர்கள்."

SRI M. KALYANASUNDRAM :—" சர்க்கார் கட்சித் தலைவர் என் அதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்கிறேன்."

" சட்டசபைக் காரியதரிசிகளுக்கு சட்டசபை கூடும் சமயத்தில் வேலை இருக்கிறது, மற்ற சமயத்தில் வேலை இல்லை என்று சொல்வது நேரடியாக விஷயம் தெரிந்தவர்களுக்கு உண்மை அல்ல என்று தெரியும். சர்க்கார் கட்சித் தலைவருக்கும் அது தெரியும். அவருக்குத் தெரிந்திருந் தாலும், அவர் நிதி மந்திரியாய் இருக்கக்கூடிய காரணத்தினால், இதை ஒப்புக்கொண்டால் பணச்செலவு அதிகமாக ஏற்பட்டுவிடுமே என்பதற்காக—பாவம்—அவர் சிப்பந்திகளின் தலைமேல் பழியைச் சுமத்தி ' சட்டசபை கூடாத காலத்தில் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளுவார்களா ? ' என்று கேட்கிறார். சட்டசபை நடக்காதகாலத்தில் அங்கத்தினர்கள் நிறைய கேள்விகளை அனுப்புகிறார்கள். அவைகளுக்கெல்லாம் பதில்கள் பெறவேண்டியதற்காக, அந்தந்த இலாகாக்களுக்கு கேள்விகளை அனுப்பி பதில் பெறவேண்டி யிருக்கிறது. மேலும், நாங்கள் கொடுக்கக்கூடிய கேள்விகளில் தவறுகள் இருந்தால், அவ்வப்போது அவைகளைத் திருத்துவதற்கு அவர்களுக்குப் போதிய சந்தர்ப்பம் இருப்பதில்லை. அப்படி அவைகளைத் திருத்தி அனுப்பவேண்டியிருக்கிறது. சட்டசபை கூடாத காலத்திலும் கேள்விகள், மசோதாக்கள் விஷயமாக அவர்களுக்கு ஏராளமான வேலைகள்

இருக்கின்றன. சட்டசபை கூடாத காலத்திலும் அவர்கள் அதிகமாக வேலை செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, மற்ற சர்க்கார் காரியதரிசிகளைப்போலவே அவர்களுக்கும் அதே விகிதத்தில் சம்பளம் கொடுக்கவேண்டும் என்ற யோசனையை கனம் மந்திரி அவர்கள் ஆலோசிப்பார்களா ? ''

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' I am glad the Hon. Deputy Leader of the Opposition is taking so much interest in the officers of the Legislature Secretariat, who are present here. I did not say that they were not doing any work during the off period. I only said that comparatively speaking, they were doing only lighter work during the recess. Of course, during the session they have to discharge very difficult tasks. This is what I mentioned. We have made a comparative analysis of the work that is done in the regular Secretariat and the Secretariat of the Legislature. After making that comparison, we thought that there should be a difference. Now the entire matter is under consideration of Government. Separate rules are being framed for the staff of the Legislature Secretariat in consultation with you, Mr. Speaker and also the Chairman of the Legislative Council, who are the heads of the Assembly and the Council. I think that there would not be any possible grievance when the separate rules are framed. I hope that many of the anomalies would be removed then. But let us not bring in competition between the regular Secretariat and the Legislature Secretariat. Let us examine each on its own merits. Let us examine on its merits the suitable pay scales for the officers concerned.''

SRI M. KALYANASUNDRAM :—'' இதில் போட்டிப் பிரச்னை எதுவும் இல்லை. எதிர்க் கட்சியினருக்கும் இதில் அக்கரை உண்டு. தூபம் போடுவதற்காகவோ பிரசாரத்திற்காகவோ நான் பேசவில்லை. நான் அப்படிப் பேசுவதாக மந்திரி அவர்கள் வேண்டுமானால் நினைத்துக்கொள்ளலாம், அல்லது பிரசாரத்திற்காகப் பேசலாம். சர்க்கார் கட்சித் தலைவருக்கும், மந்திரிகளுக்கும் உதவி செய்வதற்கு ஒவ்வொரு இலாகாவில் மூன்று அல்லது நான்கு காரியதரிசிகள் இருக்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் கேள்விகள் பற்றியும், மற்ற விஷயங்களைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு சபாநாயகருடைய காரியாலயம் ஒன்றுதான் இருக்கிறது. சபாநாயகர் காரியாலயத்திலிருக்கும் காரியதரிசிகள் எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு எல்லா உதவியும் செய்யவேண்டும் என்று கோருவதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு. ஆகையால் சிப்பந்திகளை demoralise பண்ணக்கூடிய அளவுக்கு மந்திரி அவர்கள் ஏதாவது பேசுவார்களானால் அதை எதிர்த்து நாங்கள் சுட்டிக்காட்டத்தான் வேண்டியிருக்கிறது. எதிர்க் கட்சியினருக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கும்படியான முறையில் வேலை முறைகளை மாற்றியமைப்பதற்கு சர்க்கார் கட்சித் தலைவர் ஆலோசிப்பார்களா என்று கேட்கிறேன். ''

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' I am glad the leader of the Communist Party has taken up the cause of the scales of the Assistant Secretaries and Deputy Secretary of the Legislature who are in the higher cadre. I will examine the position when the decision is taken by Government.''

SRI B. K. NALLASWAMI :—'' On a point of order, Sir/ இந்த சட்ட சபைக் காரியாலயமானது இங்குள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும்

பொதுவானது. அப்படியிருக்கும்போது எதிர்க் கட்சி உப தலைவர் தங்களுக்குத்தான் அதிகமாகச் சலுகை கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லுகிறார். ஆனால் சட்டசபை அலுவல்களைப் பொறுத்த வரையில் எல்லா அங்கத்தினர்களும் சமம் என்று சட்ட சபை விதிகள் சொல்லுகின்றன. எதிர்க் கட்சி உப தலைவர் சொல்வது விதிக்கு முரண்பாடாக இருக்கிறது. இதைக் கனம் சபாநாயகர் அவர்கள் அனுமதிக்கிறாரா என்று கேட்கிறேன்."

MR. SPEAKER :—" இங்கு எல்லோரும் சமம்தான்."

Dispute between the workers and the management of the Malabar Spinning and Weaving Mills, Tiruvannoor, Kozhikode.

* 947 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Labour Officer, Malabar, has recommended to the Government to refer the dispute between the workers and the management of the Malabar Spinning and Weaving Mills, Tiruvannoor, Kozhikode, regarding the bonus due from 1948 for adjudication; and

(*b*) if so, the action taken by the Government thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Yes, Sir.

" (*b*) The Government examined the representation and considered that the request for the grant of bonus for 1948–50 was belated and that the management did not earn sufficient profits during 1951–52 to declare a bonus to the workers. So the dispute was not referred to adjudication, and the Cotton Mill Workers' Union, Kallai, was informed accordingly."

SRI K. P. GOPALAN :—" May I ask the Hon. Minister for Labour to have the accounts of the company inspected to verify whether there had been profit or not and find out whether the workers' point of view or the management's point of view is correct? If the accounts reveal that there has been profit, will the Hon. Minister for Labour refer the matter to the Adjudication Court and await its judgment?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The Labour Department do not invariably inspect the profit and loss accounts of companies. But when the Labour Department itself is satisfied that there was no profit for a company during a particular year, they report it to Government and Government agree with the Labour Commissioner that such matters should not be referred to adjudication. I do not think this matter should be reopened again."

Issue of liquor permits in South Arcot.

* 948 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state the total number of liquor permits issued for the years 1951–52 and 1952–53 in the South Arcot district?